ஒழுங்காக நடக்கவேண்டும், அவற்றில் தவறுகள் ஏற்படக் கூடாது, அவற்றை எப்படி ரெகுலேட் செய்வது என்பதுதான் இந்த மசோதாவின் கருத்து.

பயிற்சிப் பள்ளிகள்

*297 கேள்வி—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டத்தில் உள்ள அரசினர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிக்குச் சேர 1965-66-ம் ஆண்டில் எத்தனை மாணவர் களிடமிருந்து விண்ணப்பங்கள் வந்தன, தாலுகாவாரியாக ?

(இ) அவர்களில், தாலுகாவாரியாக சேர்த்துக் கொள்ளப் பட்டவர்களின் எண்ணிக்கை என்ன ?

(உ) மேற்படி பள்ளியில் மேலும் இடங்களை அதிகரிக்கும் உத்தேசம் ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலிருக்கின்றதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: (அ) & (இ) இது குறித்து சபைமுன் விவர அறிக்கை[a] ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

(உ) வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள அரசாங்கப் பயிற்சிப் பள்ளிகள் அனைத்திலும் சாதாரணமாக ஒரு பிரிவில் 40 பேர்தான் சேர்த்துக்கொள்ளப்படுவர். ஆனால், 1965-66-ல் 45 பேரைச் சேர்த்துக் கொள்ளும்படி உயர்நிலைக் கல்வி நெறியாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, தாலுகா வாரியாக கொடுக்கப்பட்டிருக்கும் கணக்கில், ஒரு தாலுகாவில் 44 மாணவர்களும், ஒரு தாலுகாவில் 18 மாணவர்களும் என்று வித்தியாசம் இருக்கிறது. பெண்கள் எண்ணிக்கையைப் பார்த் தால், ஒரு தாலுகாவில் 32 என்றும், இன்னொரு தாலுகாவில் 2 என்றும் வித்தியாசம் இருக்கிறது. வந்த மனுக்களில் இத்தனை என்று தேர்ந்தெடுக்கப்பட்டதா அல்லது தாலுகாவிற்கு இத்தனை என்று தேர்ந்தெடுக்கப்பட்டதா ? எந்த அடிப்படையில் தேர்ந் தெடுக்கப்பட்டது என்று அறியலாமா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பொதுவாக எல்லாத் தாலு காக்களிலும் பரவலாக இருக்க வேண்டும் என்பதுதான் அரசாங் கத்தின் நோக்கம். தாலுகாவிலிருந்து எவ்வளவு மனுக்கள் வந்தன, தாலுகாவின் தேவை என்ன என்பதையெல்லாம் பார்த்து செலெக்‌ஷன் செய்யப்படுகிறது. இந்த ஜாபிதாவில் காணப்படும் கணக்குப்படி, அவ்வளவு பேரும் எல்லாத் தாலுகாக்களிலும் இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

---

a 339-ம் பக்கங்களில முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

15th March 1966]

திரு. ஆ. தங்கவேலு : தலைவர் அவர்களே, 1965-66-ல் சேர்க்கப் பட்ட ஆதாரப் பயிற்சி, ஜூனியர் பேசிக் மாணவர்களுக்கு ஸ்டைபண்ட் நிறுத்தப்பட்டிருக்கிறதா? நிறுத்தப்பட்டிருந்தால், காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு. மு. பொ. வடிவேல் : கடந்த ஆண்டு எடுக்கப்பட்ட ஐந்து பேர்களுடைய தேர்வு நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறதே. அதன் பேரில் அரசாங்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அது பற்றித் தகவல் இல்லை.

*298 கேள்வி—**திரு. ஆ. கு. சுப்பையா :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மகளிர் ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளுக்கு 1965-66-ம் ஆண்டில் விண்ணப்பம் செய்து கொண்ட மாணவிகள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் எந்தெந்த பள்ளிகளுக்கு எத்தனை மாணவி கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்?

(உ) இதற்கென்ன, தேர்வுக்குழு ஏதேனும் அமைக்கப் பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : (அ) 1,387 பேர் முது நிலை ஆதார கிரேடு பயிற்சிக்கும், 948 பேர் தொடக்க அல்லது இளநிலை ஆதார கிரேடு பயிற்சிக்கும் விண்ணப்பம் செய்தனர்.

(இ) செகண்டரி கிரேடு அல்லது முதுநிலை ஆதார கிரேடுக்கு தஞ்சாவூர், அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 80 பேரும், வேதாரண்யம், அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 40 பேரும், மன்னார்குடி செய்ண்ட் ஜோசப் பயிற்சிப் பள்ளியில் 40 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தொடக்க அல்லது இளநிலை ஆதார கிரேடுக்கு தஞ்சாவூர், அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 80 பேரும், தரங்கம்பாடி செய்ண்ட் தெரசா மகளிர் ஆதாரப் பயிற்சிப் பள்ளியில் 40 பேரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

(உ) ஆம். அரசாங்க ஆதாரப் பயிற்சிப் பள்ளிகளுக்கு, தேர்வுக் குழுக்கள் அமைக்கப்பட்டன. தனியார் பயிற்சிப் பள்ளி களைப் பொறுத்தவரையில், தமிழ்நாடு கல்வி விதிகளைச் சேர்ந்த 132-வது விதியின்படி நிர்வாகத்தினரே மாணவர்களைத் தேர்ந் தெடுத்துக் கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திரு. ஆ. கு. சுப்பையா : சார், இந்தக் குழு யார் யார்களைக் கொண்டு அமைக்கப் பட்டிருக்கிறது? எந்தத் தகுதி அடிப்படை யில் அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்?